பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 206

சனிக்கிழமை
21 ஜூன் 2025

ஆனி 07 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056


## எகிறியது முத்திரை கட்டணம்

கொழும்பு, ஜூன் 21
சட்டபூர்வ ஆவணங்களுக்கான முத்திரைக்கட்டணம் இரு மடங்காக அதிகரிக்கப்படவுள்ளது. இதுவரை

11

# செம்மணிப் புதைகுழி அகழ்வு; இதுவரை நிதி விடுவிப்பில்லை

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்ப்பாணம் - செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானத்தின் அடுத்தகட்ட அகழ்வுக்கான பாதீடு சமர்ப்பிக்கப்பட்டபோதிலும், இதுவரை நிதி விடுவிக்கப்படவில்லை என்று தெரியவருகின்றது.

11



## யாழ். மாவட்டச் செயலராக மருதலிங்கம் பிரதீபன்!

### நியமனக்கடிதம் நேற்று வழங்கிவைப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 21
யாழ்ப்பாணம் மாவட்டச் செயலராக மருதலிங்கம் பிரதீபன் நியமிக்கப்பட்டுள்ளார்.
யாழ்ப்பாணம் மாவட்டபதில் மாவட்டச் செயலராகக் கடமையாற்றி வந்த அவரை, நிரந்தர மாவட்டச் செயலராக

09




## செம்மணிப் புதைகுழிக்கு நீதியை நிலைநாட்டுங்கள்

### நேற்றுப் பெரும் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 21
செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதிகோரி, யாழ்ப்பாணம் செம்மணி வளைவுக்கு அருகில் நேற்று மாபெரும் போராட்டமொன்று

11

## மனிதப் புதைகுழிக்கு நீதிகேட்டு அணையா விளக்குப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 21
செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதிகோரியும், சர்வதேச கண்காணிப்புடன் மனிதப் புதைகுழி அகழ்வை முன்னெடுக்குமாறு வலியுறுத்தியும் 'மக்கள் செயல்' என்ற தன்னார்வ இளையோர் அமைப்பால் வெகுசனப் போராட்டமொன்று நடத்தப்படவுள்ளது.
நாளைமறுதினம் திங்கட்கிழமை முதல் எதிர்வரும் புதன்கிழமை வரையான

11

## எம்.பி. பதவியிலிருந்து சூரியப்பெரும விலகல்

கொழும்பு, ஜூன் 21
பிரதி அமைச்சர் ஹர்ஷன சூரியப்பெரும, நாடாளுமன்ற உறுப்புரிமையில் இருந்து விலகுவதாக நேற்று அறிவித்துள்ளார்.
தனது பதவி விலகல்

11

பூச்சந்தி பூரானி



'அப்ப அடுத்த இடைநிறுத்தல் கடிதம் ரெடி எண்டு செல்லுங்கோ'

## குடும்பத்தலைவர் அடித்துக்கொலை

யாழ்ப்பாணம், ஜூன் 21
தலையில் மண்வெட்டிப் பிடியால் அடித்ததால், காயமடைந்த குடும்பத்தலைவர் ஒருவர், மேலதிக சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார்.
வவுனியா - வவுனிக்குளம் பகுதி

11

### விசேட அமர்வாக

## ஜூன் 30ஆம் திகதி நாடாளுமன்று கூடும்

கொழும்பு, ஜூன் 21
எதிர்வரும் 30ஆம் திகதி விசேட நாடாளுமன்ற அமர்வுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்

11

### ஓமந்தை கோர விபத்து

## படுகாயமடைந்திருந்த முதியவர் சிகிச்சையின்போது உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 21
வவுனியா - ஓமந்தைப் பகுதியில் மே மாதம் 26ஆம் திகதி, காரும் டிப்பரும் மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்திருந்த முதியவரான துரைசாமிக்குருக்கள்

11

## ஹன்ரர் மோதியதில் முதியவர் உயிரிழப்பு

### உடுப்பிட்டியில் பரிதாபம்

யாழ்ப்பாணம், ஜூன் 21
யாழ்ப்பாணம் உடுப்பிட்டி யூனியன் பகுதிக்கு அருகில் நேற்று இரவு இடம்பெற்ற விபத்தில் 77 வயது

09

## ஆட்சி அமைத்த தரப்புகள்

### தமிழரசு உறுப்பினர் 'பல்டி'

## ஊர்காவற்றுறையில் பேரவையின் ஆட்சி



யாழ்ப்பாணம், ஜூன் 21
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினரொருவர் கட்சிமாறி வாக்களித்ததைத் தொடர்ந்து, ஊர்காவற்றுறை பிரதேசசபையில் தமிழ்த் தேசியப் பேரவை நேற்று ஆட்சியமைத்துள்ளது.

11

## வேலணை பிரதேசசபையில் தமிழரசுக் கட்சியின் ஆட்சி



யாழ்ப்பாணம், ஜூன் 21
வேலணை பிரதேசசபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஏகமனதாக ஆட்சியமைத்துள்ளது. தவிசாளராக சிவலிங்கம் அசோக்குமார் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
வேலணை பிரதேசசபை

11

## வலி. தென்மேற்கு சபையில் ஆட்சியமைத்தது தமிழரசு!




யாழ்ப்பாணம், ஜூன் 21
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆட்சியமைத்துள்ளது. தவிசாளராக கந்தையா ஜெசீதன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
28 ஆசனங்களைக்

09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| கொவிசெத | |
|---|---|
| திகதி | 20.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4108 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கங்கள் | 48 60 68 80 |
| விசேட எழுத்து | P |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 20.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1175 |
| வெற்றி இலக்கினம் | கன்னி |
| வெற்றி இலக்கங்கள் | 09 17 42 44 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 20.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0134 |
| ஆங்கில எழுத்து | B |
| வெற்றி இலக்கங்கள் | 4 2 4 7 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 20.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2214 |
| ஆங்கில எழுத்து | C |
| சுப்பர் இலக்கம் | 19 |
| வெற்றி இலக்கங்கள் | 12 45 51 53 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 20.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5866 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கங்கள் | 3 6 4 5 7 2 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 20.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1896 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கங்கள் | 19 39 43 53 |
| விசேட எழுத்து | O |

# இம்யூனோகுளோபுளின் மருந்தில் பக்றீரியா அழுக்குநீர்!

## உறுதிப்படுத்தியது ஜேர்மன் ஆய்வுகூடம்

**கொழும்பு, ஜூன் 21**

**சர்ச்சைக்குரிய இம்யூனோகுளோபுளின் தடுப்பு மருந்தில் உடல் நலத்திற்குத் தீங்கு விளைவிக்கும் பக்றீரியா கொண்ட அழுக்குநீர் மற்றும் புற்றுநோய் தடுப்பு மருந்தான ரிட்டுசிமெப் மருந்தில் உப்பு நீர் மட்டுமே இருந்தது என்பது உலக சுகாதார நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஜேர்மன் ஆய்வுகூடம் உறுதிப் படுத்தியுள்ளது என்று சட்டமா அதிபர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.**

தரமற்ற மருந்துகள் விநியோகம் தொடர்பான வழக்கு நேற்றுமுன் தினம் மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரியாகம இந்தத் தகவலை நீதி மன்றத்துக்குத் தெரிவித்தார். (எ-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 20.06.2025 | வெள்ளிக்கிழமை | 0574 |
| DLB | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| | J | 9 6 0 5 2 7 |

| Super Ball DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 20.06.2025 | வெள்ளிக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2840 | P | 28 41 61 74 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 20.06.2025 | வெள்ளிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| G | 10 69 73 78 | 5001 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | தினம் |
| 20.06.2025 | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0708 | 20 35 47 |

| லக்ன ராசி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 20.06.2025 | வெள்ளிக்கிழமை | |
| மேடம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| ♈ | 08 31 33 35 | 4552 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 20.06.2025 | வெள்ளிக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| B | 34 | 07 22 37 62 | 2016 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 20.06.2025 | வெள்ளிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| N | 24 33 39 74 | 2666 |

# கிடைத்த வாய்ப்பை கோட்டைவிட்டது அரசு

## சம்பிக்க தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 21

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் வரித்திட்டம் காரணமாக எரிபொருள்களின் விலை 25 வீதத்தால் குறைந்தது. அந்தக் காலப்பகுதியில் விலையைக் குறைத்திருக்கலாம். ஆனால், அதைச் செய்யவில்லை என்று முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இந்த அரசு சர்வதேச நாணயநிதியத் திடம் அடிமைப்பட்டுக் கிடக்கிறது. அதனால்தான் மின் கட்டணத்தை அதிகரித்துள்ளது. இந்த அரசு கண்ணை மூடிக்கொண்டு நாடுகளுடன் ஒப்பந்தம் செய்கிறது. சீனாவுடன் 15 ஒப்பந்தம். இந்தியாவுடன் ஏழு ஒப்பந்தம் அமெரிக்காவுடனும் செய்யப்போகிறது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-75)

# பிரதமர் பதவி நீக்கம் என்பது எதிர்க்கட்சிகளின் வதந்தியே

## ஹரிணி அமரசூரிய தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 21

பிரதமர் பதவியில் இருந்து நீக்கப்படவுள்ளேன் என்று கூறப்படுவதில் உண்மையில்லை. அது எதிர்க்கட்சிகளின் போலிப் பரப்புரை என்று தெரிவித்துள்ளார் பிரதமர் ஹரிணி அமரசூரிய.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நான் 2019 இல் நாடாளுமன்றதுக்கு வந்ததில் இருந்து எங்களது அரசியல் எதிரிகள் தேசிய மக்கள் சக்திக்குள் இரண்டு முகாம்கள் உள்ளன என்று கூறுகின்றனர். ஒன்று தேசிய மக்கள் சக்தி, அடுத்தது ஜே.வி.பி. ஆனால் அவ்வாறு எதுவும் இல்லை. தேசிய மக்கள் சக்தி என்பது நாங்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து உருவாக்கிய கட்சி.

ஹரிணியை வெளியே போடப்போகிறார்கள் என்று நெடுங்காலமாகச் சொல்லிவருகிறார்கள். அதன் தொடர்ச்சியாகத்தான் பிரதமர் பதவியில் இருந்து நீக்கப்படப்போகிறேன் என்ற பரப்புரையும் நடக்கின்றது. அரசியல் இலாபத்துக்காக இது மட்டுமல்ல இன்னமும் செய்வார்கள். அது எங்களை எந்த வகையிலும் பாதிக்காது - என்றார். (எ-75)

# நிதி மோசடி விசாரணை வளையத்தினுள் 20 பேர்

கொழும்பு, ஜூன் 21

அமைச்சர்கள், அரசியல்வாதிகள் உட்பட 20க்கும் மேற்பட்டவர்களின் சொத்துக்கள் தொடர்பாக பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளைத் தொடங்கியுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.

சட்டவிரோதமாக சம்பாதித்ததாகக் கூறப்படும் மில்லியன் கணக்கான ரூபா சொத்துகளைக் கைப்பற்றுவதற்காக இந்த விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சொத்துகள் தொடர்பாக விசாரிக்கப்படும் அரசியல்வாதிகளில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச, முன்னாள் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, முந்தைய அரசாங்கத்தின் முன்னாள் அமைச்சர்கள் குழு மற்றும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவும் அடங்கும் என்று கூறப்படுகின்றது. (எ-இ)



# ஐ.ம.சக்தி – ஐ.தே.கட்சி இணையவேண்டும்

## முஜிபுர் ரஹ்மான் விருப்பம்

ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் இனியாவது ஒன்றுசேரவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் கிடைத்த வாக்குகளை பார்க்கும்போது வாக்குகள் பிரிந்து சென்றுள்ளதை அவதானிக்கமுடிகிறது. அதனால் ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் ஒன்றிணையவேண்டும் என்ற நிலைப்பாட்டில் நான் உள்ளேன். ஐக்கிய மக்கள் சக்தியை அடிப்படையாகக்கொண்டு கூட்டமைப்பொன்று உள்ளது. அந்தக் கூட்டமைப்பில் ஐக்கிய தேசியக் கட்சியும் இணையவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு - என்றார். (எ-இ)

# தமிழீழ வைப்பகத்தின் நகைகளை உரியவரிடம் சேர்க்க பொறிமுறை

## கோடீஸ்வரன் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 21

தமிழீழ வைப்பகத்திலிருந்து பெறப்பட்ட நகைகளை, அவற்றின் உரிமையாளர்களிடம் விரைவில் கையளிப்பதற்குரிய பொறிமுறை உருவாக்கப்படவேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தமிழீழ வைப்பகத்தில் வைக்கப்பட்ட நகைகள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டிருந்தார். எனினும், அதற்குரிய நடவடிக்கை இன்னும் ஆரம்பமாகவில்லை. மக்களின் நகைகளை அவர்களிடமே மீண்டும் வெகுவிரைவில் கையளிப்பதற்குரிய பொறிமுறையை உருவாக்க வேண்டும் - என்றார். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார முன்னேற்றத்துக்கு பெண்கள் பங்களிப்பு அவசியம்

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 21**

**நாட்டின் புள்ளிவிவரங்களின்படி பெண்களின் தொழில்பங்களிப்பு 32 வீதமாகவே காணப்படுகின்றது. பெண்களின் தொழில்முறை சுதந்திரத்தை உறுதிசெய்வது நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கு அத்தியாவசியமான விடயமாகும் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

"இலங்கையில் பெண்களின் பொருளாதாரப் பங்களிப்பை அதிகரித்தல்" என்ற தலைப்பின்கீழ் உலக வங்கி குழுமத்தால் ஏற்பாடுசெய்யப்பட்ட நிகழ்ச்சியில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெண்களுக்குத் தொழிலாளர் படையுடன் இணைவதற்கு உள்ள வாய்ப்பு பெரிதும் வரையறுக்கப்பட்டுள்ளது. குழந்தைகளைப் பராமரிப்பது வெறும் பெண்களின் பொறுப்பாகக் கருதாமல் பெண்களின் தொழில்முறைச் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவது அவசியம். சிறுவர் பராமரிப்பை உறுதிப்படுத்துவதன்மூலம் பெண்களுக்கு அதிகமாக நாட்டின் பொருளாதாரத்துடன் இணைவதற்கான வாய்ப்புகளை விரிவுபடுத்தி அவர்களுக்குத் தொழிலாளர்படையில்உயர்ந்த முன்னேற்றம் கிடைக்கும் வழியைத் திறப்பது எவ்வாறு என்பது பற்றி விவாதிக்க வேண்டும் - என்றார். (ச-26)

# விவசாய அமைச்சர் யாழ்ப்பாணம் வருகை

யாழ்ப்பாணம், ஜூன் 21

விவசாயம், கால்நடை, நீர்ப்பாசனம் மற்றும் காணி அமைச்சர் கே.டி.லால்காந்த நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்திருந்தார். நல்லூர் கோண்டாவில் இராஜேஸ்வரி மண்டபத்தில் இடம்பெற்ற மாணவர்களுக்குப் புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வில் விவசாய அமைச்சர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இதில் பாடசாலை மாணவர்கள் 200 பேருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன. நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சியின் உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-125)

# தெல்லிப்பழைப் பிரதேசத்தில் மருத்துவக்கழிவுகள் எரியூட்டல்

## மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை வளாகத்திலுள்ள எரியூட்டியில் மருத்துவக்கழிவுகள் எரியூட்டப்படுவதால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தெல்லிப்பழைப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் அண்மையில் இடம்பெற்றபோது அவர்கள் இதனைச் சுட்டிக்காட்டினர். யாழ். மாவட்ட மருத்துவமனைகளிலிருந்து வெளியேற்றப்படும் மருத்துவக்கழிவுகள் இங்கு எரியூட்டப்படுகின்றன. இந்தச் செயற்பாட்டால் சுற்றாடல் பாதிப்பு ஏற்படுகிறது என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (ச-125)

# கறுத்தக்கொழும்பான் கிலோ ரூ.900



யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்.மாவட்டத்தில் கறுத்தக்கொழும்பான் மாம்பழத்துக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலை மற்றும் வெள்ளைஈ தாக்கம் போன்றவற்றால் மாமரங்கள் இம்முறை கூடுதலாகக் காய்க்கும் தன்மையை இழந்துள்ளன. இதனால் மாம்பழங்களின் விலை உயர்வடைந்துள்ளது. யாழ்ப்பாணத்துக் கறுத்தக்கொழும்பான் மாம்பழம் கிலோ 900 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது.


வடக்கே வரும் சுற்றுலாப்பயணிகள் இந்த மாம்பழத்தை அதிகளவில் நுகர்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-17)

# துசிதவுக்கு பிணை!

கொழும்பு, ஜூன் 21

தேசிய லொத்தர் சபையின் முன்னாள் பணிப்பாளர் துசித ஹலோலுவ, பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். அரசாங்க சொத்துகளைத் துஷ்பிரயோகம் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் தேசிய லொத்தர் சபையின் பணிப்பாளர் துசித ஹலோலுவ கோட்டைத் தலைமை நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# எரிபொருள் நுகர்வு வீழ்ச்சி



யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்.குடாநாட்டில் தற்போது எரிபொருள் விநியோகம் வீழ்ச்சியைப் பதிவுசெய்துள்ளதாக எரிபொருள் விற்பனை நிலையங்கள் தெரிவித்துள்ளன.

எரிபொருள் பற்றாக்குறை ஏற்படும் எனப் பரப்பப்பட்ட போலித் தகவலையடுத்து கடந்த சில தினங்களாக எரிபொருள் நிலையங்களில் நீண்ட வரிசைகளில் காத்திருந்து மக்கள் எரிபொருளைப் பெற்றனர். இந்தநிலையில் தற்போது எரிபொருள் நிலையங்கள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன. (ச-17)

# தே.ம.ச.உறுப்பினர் பதவிவிலகல்

கொழும்பு, ஜூன் 21

தேசிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தி பலங்கொடப் பிரதேசசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ரஞ்சித் உதயகுமார, பிரதேசசபைத் தலைவர் பதவியிலிருந்து உத்தியோகபூர்வமாக விலகியுள்ளார்.

அவரது இடத்துக்கு காம எதிகே ஆரியதாச பலங்கொட பிரதேச சபையின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். (ச-இ)




# ஆடு மேயுதே... ஆடு மேயுதே..!

ஆடு பகை குட்டி உறவெண்ட கதைமாதிரித்தான் திசைகாட்டிக்காரர் நடந்துகொள்ளுகினமெண்டு சனங்கள் சாடைமாடையாப் புறுபுறுக்கத் தொடங்கிட்டுதுகள். அதுக்கும் காரணம் இருக்கத்தான் செய்யுது. இப்ப திசைகாட்டி அமைச்சர் சான்ஸ் கிடைக்கிற நேரமெல்லாம் மற்றக் கட்சியளைவிடவும் வீணைக்கட்சியைத்தான் போட்டுத்தாக்கிக்கொண்டிருக்கிறார். முள்ளிவாய்க்கால் சூத்திரதாரியள், படுகொலையாளிகள், சதிகாரர் எண்டெல்லாம் வீணைக்கட்சியை அவர் வசைபாடிறது இப்ப கொஞ்சம் கூடவா இருக்குது. அப்பிடி அவர் ஒருபக்கம் வீணைக்கட்சியைப் பிளந்துகட்டிப்போட்டுமற்றப்பக்கமா அந்தக் கட்சியின்ர விசுவாசியளை ஒருங்கிணைப்புக்குழு ஒப்பீஸுக்குள்ள எடுத்துவைச்சிருக்கிறாராம்.

இப்ப கிட்டடியில ஒருங்கிணைப்புக்குழுவின்ர அலுவலகம் கச்சேரியில திறந்துவைச்சவை. முதலும் ஒருக்கா இதேபேரில ஒரு அலுவலகம் கச்சேரியில வேற இடத்தில திறந்துவைச்ச கொஞ்சநாளில அதேபேரில இன்னொரு ஒப்பீஸ் திறக்க எல்லாருக்கும் ஒரே குழப்பம். ஒரேயொரு ஒருங்கிணைப்புக்குழுவுக்கு எதுக்கு ரண்டு ஒப்பீஸ்? இல்லாட்டி முதல் ஒப்பீஸைத் திறந்ததை மறந்திட்டினமோ? எண்டுதான் எல்லாரும் யோசிச்சவை. ஆனால் அதுவேற ஒப்பீஸ், இதுவேற ஒப்பீஸ் எண்டு இப்ப சொல்லுகினம். முதல் திறந்தது ஒருங்கிணைப்புக்குழுத்தலைவரின்ர ஒப்பீஸாம், இப்ப திறந்தது ஒருங்கிணைப்புக்குழுவின்ர ஒப்பீஸாம். பேரில என்ன இருக்கு. வேலை நடந்தால் சரிதானே.

இப்ப என்னெண்டால், இப்ப கடைசியாத் திறந்த ஒருங்கிணைப்புக்குழு ஒப்பீஸில வீணைக்கட்சிக்காரர் தங்கட கட்சிக்கு விசுவாசமான ஓராளை மேயவிட்டிருக்கினமாம். ஒருங்கிணைப்புக்குழுவில என்னென்ன நடக்குது எண்டு அறிஞ்சு, வீணைக்கட்சியின்ர மேலிடத்துக்குச் சொல்றதுதான் அந்த ஆளுக்கு குடுக்கப்பட்ட அசைமெண்ட். அந்த உத்தியோகத்தர் வீணையின்ர பக்தை எண்டு எல்லாருக்கும் தெரிஞ்சதால முதல் அவா இருந்த ஒப்பீஸில எல்லாம் கொஞ்சம் எட்டவாத்தான் வைச்சிருந்தவை. ஆனால் திசைகாட்டிக்காரர்தான் வெளுத்ததெல்லாம் பால் எண்டு நம்பிடுவினமே. அதைப் பாவிச்சுத்தான் வீணைக்காரர் நைஸா தங்கட ஆளை திசைகாட்டியின்ர கோட்டைக்குள்ள இறக்கி விட்டிருக்கினம். ஆனால் வெளிப்பார்வைக்கு 'அமைச்சர் வீணையைப் பேசுறார், ஆனால் அவரின்ர கட்டுப்பாட்டில இருக்கிற ஒருங்கிணைப்புக்குழு ஒப்பீஸுக்கு வீணைக்கட்சி ஆளைப் போட்டிருக்கிறாரே. 'வெளியால வீணையோட சண்டை மாதிரிக் காட்டிக்கொண்டு, உள்ளுக்கால வீணையும் திசைகாட்டியும் ரகசிய டீல் போட்டிருக்கினமோ?' எண்டமாதிரித்தான் படுகுது. அக்கம் பக்கமுள்ள ஆக்களையும் கொஞ்சம் கண்ணுக்கு எண்ணெய் விட்டுப் பார்த்தபடி அவதானமா இல்லாட்டி, திசைகாட்டிக்கு சிக்கல் வந்தாலும் வரக்கூடும் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அதிர்ஷ்டகரமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். சகோதரவகையில் எதிர்பாராத ஆதாயம் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சியுடன் செலவுகளும் ஏற்படும். மற்றவர்களுடன் வீண்விவாதம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது.

**இடபம்:** புதிய முயற்சிகள் எதுவும் இன்றைக்கு வேண்டாம். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், உணவு விஷயத்தில் கவனமாக இருக்கவும். உறவினர்கள் வருகையால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் நலனில் கவனம் தேவை. உறவினர்கள் உதவிகேட்டு வருவார்கள். தாய்மாமன்வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்துவேறுபாடு நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கடகம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். ஆனால், புதிய முயற்சிகளில் ஈடுபடுவதை தவிர்க்கவும். வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படக்கூடும். இளைய சகோதரவகையில் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும்.

**சிம்மம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாகமுடியும். சிலருக்கு திடீர்ச்செலவுகளால் கையிருப்புக் குறையும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவுகள் எதுவும் இன்றைக்கு எடுக்கவேண்டாம். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**கன்னி:** எந்த முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். கணவன் மனைவிக்கிடையே சிறு பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**துலாம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவுசெய்யநேரிடும் என்பதால், கையிருப்புக் கரையும். வாழ்க்கைத்துணை உங்கள் பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும். இளைய சகோதரவகையில் ஆதாயம் ஏற்படும்.

**விருச்சிகம்:** உற்சாகமான நாள். தொட்ட காரியங்கள் வெற்றிகரமாகமுடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் எதிர்பாராத ஆதாயம் ஏற்படக்கூடும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**தனுசு:** உற்சாகமான நாள். சகோதரர்கள் வகையில் அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். பிள்ளைகளின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். சிலருக்கு திடீர் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**மகரம்:** எதிலும் அவசரமில்லாமல் செயற்பட வேண்டியநாள். உறவினர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரையும்.

**கும்பம்:** அன்றாடப் பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி இருக்கும் கணவன் மனைவிக்கிடையே வீண்விவாதங்கள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**மீனம்:** புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்குப் பக்கபலமாக இருப்பார்.





# நிலத்தடிநீரை மேம்படுத்துதல் யாழில் விசேட கருத்தமர்வு!

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ். மாவட்டத்தின் நிலத்தடிநீரை மேம்படுத்தும் முகமாக விசேட விழிப்புணர்வுக் கருத்தமர்வு நேற்று திருநெல்வேலியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது. பிரித்தானிய அரசாங்கத்தின் சர்வதேச அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனத்தின் ஒழுங்குபடுத்தலில் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் நீர் மேலாண்மை தொடர்பாக பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. அதற்கமைய குறித்த நிகழ்ச்சித் திட்டத்தின் பங்குதாரர்களான சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனம், யாழ். பல்கலைக் கழக அதிகாரிகள் மற்றும் பேராசிரியர்கள், துறைசார் திணைக்கள அதிகாரிகள் மாணவர்கள் மற்றும் திட்டத்தின் பங்குதாரர்களுக்கான விசேட கருத்தமர்வாக முன்னெடுக்கப்பட்டது. இதன்போது பிரிட்டன் உயர்ஸ்தானிகர் அன்ரூ பட்றிக் விசேட அதிதியாகக் கலந்துகொண்டு விசேட உரையாற்றினார். நிகழ்வில் மாணவர்களிடையே நன்னீர் விழிப்புணர்வை மேம்படுத்துவது தொடர்பில் நடத்தப்பட்ட ஓவியப் போட்டி மற்றும் வினாவிடைப் போட்டிகளுக்கான பரிசில்களும் வழங்கிவைக்கப்பட்டன. (ச-125)

# வெற்றியீட்டிய பெண் வேட்பாளர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 21

வடக்கு மாகாணத்தில் இம்முறை உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டிய பெண் வேட்பாளர்களை கௌரவப்படுத்தும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் புங்கங்குளம் வீதி அரியாலை ஜே விருந்தினர் விடுதியில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வு பெண்களுடைய அரசியல் வகிபங்கை வலுப்படுத்தும் செயற்பாடுகளை கடந்த பல வருடங்களாக முன்னெடுத்துவரும் யாழ். சமூக செயற்பாட்டு மையத்தால் முன்னெடுக்கப்படவுள்ளது. (ச-41)

# பெருந்திருவிழா

யாழப்பாணம், ஜூன் 21

சாவகச்சேரி அமிர்தபாஷினி சமேத சந்திரசேகர் சிவன் கோவில் வருடாந்தப் பெருந்திருவிழா நாளைமறுதினம் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். பெருந்திருவிழா கிரியைகள் சிவஸ்ரீ சி.திருமாறக்குருக்கள் தலைமையில் நடைபெறும். (ச-41-9)

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

ஈழத்து இராமேஸ்வரம் என வழங்கும் புங்குடுதீவு பாணாவிடைச்சிவன் தேவஸ்தான பொதுக்கூட்டம் உப தலைவர் செ.ஜெகதீஸ்வரன் தலைமையில் நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. கூட்டத்தில் அடியார்கள், அன்பர்கள், நலன்விரும்பிகள், திருவிழா, திருவெம்பாவை விசேட பூசை உபயகாரர்கள் ஆகியோரைப் பங்கேற்குமாறு ஆலயப் பரிபாலன தர்மகர்த்தா சபையினர் தெரிவித்துள்ளனர். (ச-41)

# இரண்டு நாள் நிகழ்வுகளாக சங்கிலியன்மன்ற அமுதவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்ப்பாணம், நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் 80ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு அமுதவிழா நிகழ்வுகள் இரண்டு நாள்கள் நடைபெறவுள்ளன.

இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் மாலை 6.30 மணிக்கு ஆரம்பமாகி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இன்று சனிக்கிழமை சாரங்கா இசைமன்ற இயக்குநரும் ஓய்வுநிலை ஆசிரியருமான திருமதி வாசஸ்பதி ரஜீபன் தலைமையில் சங்கிலியன் அரங்கில் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கிராம அபிவிருத்தித் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் திருமதி கஜானி பார்த்தீபன் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக இசைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி சுகன்யா அரவிந்தன், யாழ். மாநகரசபை உறுப்பினர் திருமதி சரஸ்வதி சுகிர்தராஜ், யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தைச் சேர்ந்த திருமதி தயாபரன் மலர்மகள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

விசேட நிகழ்வாக கலாநிதி க.சிதம்பரநாதனின் அரங்கச் செயற்பாட்டுக் குழுவினரின் பறையும் பாடலும் நிகழ்வு இடம்பெறும்.

தொடர்ந்து மன்றத்தில் நடைபெறும் வகுப்புகளில் கல்விகற்று புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதனையடுத்து மன்றத்தால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

தொடர்ந்து மன்றத்தில் அறநெறி வகுப்புகளில் கற்கும் மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறும்.

இரண்டாம் நாளான ஞாயிற்றுக்கிழமை நிகழ்வுகள் சங்கிலியன் மன்றத் தலைவர் மருத்துவர் வி.ஜனகன் தலைமையில் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி மதிவதனி விவேகானந்தராசா கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாகத் தொழிலதிபர் ஈ.எஸ். பேரம்பலம், பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் ரி. ஜெயசீலன், தொழிலதிபர் கணேசராஜா செந்தூரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இரண்டாம் நாள் நிகழ்வில் விசேட நிகழ்வாக விருந்தினர்கள் பாரம்பரியக் கலையான சிலம்பாட்டத்துடன் சங்கிலியன் மன்னனின் தோரணை வாயிலில் இருந்து விழா மேடைக்கு அழைத்துவரப்படவுள்ளனர்.

(ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

நம்முடைய கனவுகளை இலட்சியங்களை அடைய இடையிலுள்ள தடைக் கற்களை உடைக்க வேண்டும்.

– அம்பேத்கர் –

# மோதல் அங்கே, தாக்கம் இங்கே!

இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையே வலுவடைந்துவரும் போர், உலகில் புதிய பதற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அணுசக்தியை மையமாகக் கொண்ட மோதல் என்பதால், மத்திய கிழக்கைத் தாண்டி இலங்கை உள்ளிட்ட உலகின் பல நாடுகள் பாதிக்கப்படும் சூழல் உருவாகியிருக்கிறது. ஒட்டுமொத்த உலகின் செல்நெறியையும் 'ஒழுங்கையும் மாற்றிவிடக்கூடிய வகையில்தான், இஸ்ரேலிய' ஈரானிய ஏவுகணைகள் அணிவகுத்துப் பறக்கின்றன

ஈரானின் அணு ஆயுத உற்பத்தியைத் தடை செய்வதை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட 'ஈரானிய அணுவாயுதப் பரவல் தடை ஒப்பந்தம்' 2015ஆம் ஆண்டில் கைச்சாத்தானது. அதன்பின்னர் ஆட்சிக்குவந்த அமெரிக்க அதிபர் ட்ரம்ப், 2018ஆம் ஆண்டில் அந்த ஒப்பந்தத்தைத் தூக்கியெறிந்தபோதே, இந்த மோதலுக்கு பிள்ளையார்சுழி போடப்பட்டாயிற்று. ஆனால், ஹிஸ்புல்லா, ஹமாஸ், ஹவுத்தி என ஈரானிய 'துணை இராணுவக் குழுக்கள்' பலமாக இருந்ததால், போர் ஒன்றுக்குச் செல்வதை அதிபர் ட்ரம்ப் அன்று தவிர்த்திருந்தார். இன்று ஹிஸ்புல்லாவும், ஹமாஸும் பலமிழக்கச் செய்யப்பட்டுள்ளன. ஈரானின் பிராந்திய சகாவான சிரியாவிலும் ஆட்சிமாற்றம் ஏற்பட்டுள்ளது. காஸாவின் நிலையோ கவலைக்கிடம். ஆக, ஈரானை வீழ்த்துவதற்கு இதைவிட வேறு வாய்ப்பு இனியொருமுறை கிடைக்கப் போவதில்லை என்ற சூழலைப் புரிந்துகொண்டே இந்தப் போரில் அமெரிக்காவும் இஸ்ரேலும் முழுமூச்சாக இறங்கியிருக்கின்றன. ஈரான் அணு ஆயுதங்களைத் தயாரிக்கப் பயன்படுத்தக்கூடிய அளவுக்கு யுரேனியத்தைச் செறிவூட்டியுள்ளதாகக் கூறப்படும் வாதத்தை முன்வைத்து, தங்கள் சுய பாதுகாப்புக்காக ஈரான்மீது தாக்குதல் நடத்துவதாகக் காரணம் சொல்கிறது இஸ்ரேல். பதிலடியாக, இதுவரை இல்லாத அளவுக்கு இஸ்ரேல் மீது ஈரான் பதிலடித் தாக்குதல் நடத்திவருகிறது.

உலக நாடுகளால் கொள்வனவு செய்யப்படும் கச்சா எண்ணெயில் 50 வீதத்துக்கும் மேற்பட்டவை ஹோர்முஸ் நீரிணை வழியாகத்தான் கொண்டுவரப்படுகின்றன. எனவே, போர் தீவிரமடைந்தால், இந்த நீரிணையை மூடப்போவதாக ஈரான் ஏற்கனவே எச்சரித்திருக்கிறது. அது நடக்கும் பட்சத்தில் உலகளவில் வர்த்தகத் தளம்பல் ஏற்படும். இந்த வர்த்தகத் தளம்பல் இலங்கையை இலக்காகக்கொண்டதாக இல்லாதுவிடினும், உலக நாடுகளுடன் போட்டிபோட முடியாத நிலைக்கு இலங்கை தள்ளப்படும் என்பது உறுதி. தென் மேற்குப் பருவமழைக்கான காற்று, மேற்கு ஆசியா வழியாகவே தெற்காசியாவை வந்தடையும் என்பதால், ஈரானில் ஏற்படும் அணுக்கதிரின் செறிவுத்தன்மைக்கு ஏற்ப அது இந்தியா, இலங்கை உள்ளிட்ட நாடுகளையும் பாதிக்கும் என்று எச்சரிக்கைக் குரல்கள் ஒலிக்கத் தொடங்கியிருக்கின்றன. இந்தப் போரில் இலங்கையின் குரல் செவிசாய்க்கப்படும் நிலையோ, அல்லது இலங்கை தீர்மானிக்கும் சக்தியாக மாறும் தன்மையோ இல்லை. எனினும் இந்தப் போருக்கு எதிராகக் குரல் கொடுக்கவேண்டியதும், ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான மோதலால் ஏற்படும் விளைவுகளையும் அனுமானித்து அதற்கேற்ப கவனமாகக் காய்நகர்த்தவேண்டியதும் அரசின் முன்னுள்ள பொறுப்பாகும்.






## மிதமிஞ்சிய மருந்துகளை பயன்படுத்தும் இலங்கையர்

கொழும்பு, ஜூன் 21

**இலங்கை மக்கள் மிதமிஞ்சிய மருந்து, மாத்திரைகளைப் பயன்படுத்துகின்றனர் என்று பிரதி சுகாதார அமைச்சர் மருத்துவர் ஹன்சக விஜேமுனி தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாட்டில் தற்போது 863 பொதுப் பெயர் மருந்துகள் (generic drugs) கொள்வனவுசெய்யப்படுகின்றன. அவற்றில் மூன்றில் இரண்டு பங்கு இறக்குமதி செய்யப்பட்டவையாகவும், ஏனையவை உள்ளூர் தயாரிப்புகளாகவும் உள்ளன. இந்த மருந்துவகைகள் அவசியமில்லாது அதிகளவில் காணப்படுகின்றன. வழிகாட்டு நெறிமுறைகள் இல்லாத காரணத்தால் மருந்துகளின் பாவனை மிக அதிகமாக உள்ளது. இங்கிலாந்து போன்ற முன்னேறிய நாடுகளில்கூட இதைவிடக் குறைவாகவே மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. மருந்தளிப்புத் தொடர்பான நெறிமுறைகள் உருவாக்கப்படவேண்டும். நவீன நெறிமுறைகள் கொண்டு 450 முதல் 500 மருந்துப் பிரிவுகளுக்கு இந்த எண்ணிக்கையைக் குறைக்கமுடியும். உரிய முறையில் தகவல்கள் பெற்று கொள்வனவுசெய்யத் தவறியதன் காரணமாக நாட்டில் மருந்துப் பொருள்கள் சிலவற்றுக்கு பற்றாக்குறை நிலவுகின்றது. எதிர்காலத்தில் நாட்டில் மருந்துப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதனை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்என்றார். (ஏ-இ)

## பகிடிவதை குறித்து 30 முறைப்பாடுகள்

கொழும்பு, ஜூன் 21

2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் பகிடிவதைச் சம்பவங்கள் தொடர்பில் 30க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதிகளவான முறைப்பாடுகள் சப்ரகமுவ பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும் ஒலுவில் பல்கலைக்கழகம் ஆகியவற்றிலிருந்து பதிவாகியுள்ளன. இதே வேளை பகிடிவதைச் சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடு அளிக்க, 1997 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்புகொள்ளுமாறு குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

## பங்குச்சந்தைக்கு புதிய தலைவர்

கொழும்பு, ஜூன் 21

கொழும்பு பங்குச்சந்தையின் புதிய தலைவராக திமுத்து அபேசேகர நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கையின் மூலதனச் சந்தைகளில் 35 வருட அனுபவத்துடன் கடந்த 6 ஆண்டுகளாக கொழும்பு பங்குச்சந்தையின் பணிப்பாளர்கள் குழுவின் உறுப்பினராக அவர் பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## இந்தியாவின் உதவியை நாடிய இலங்கை அரசு

கொழும்பு, ஜூன் 21

அண்மையில் ஈரானில் கல்விகற்றுக் கொண்டிருந்த 110 மாணவர்களை மீட்டு ஆர்மீனியாவுக்கு அழைத்துவந்து அங்கிருந்து புதுடில்லிக்கு அழைத்துவந்துள்ளது இந்திய அரசு. இதனையடுத்து ஈரானிலுள்ள 35 இலங்கை மாணவர்களையும் வெளியேற்றுவதற்கு இந்தியாவின் உதவியை நாடியுள்ளது இலங்கை அரசு. வெளிவிவகார அமைச்சு கொழும்பிலுள்ள இந்தியத்தூதரகத்தினூடாக இந்திய வெளிவிவகார அமைச்சிடம் உத்தியோகபூர்வமாக இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது. (ச-41-6)




## வீதி விபத்துகளில் ஆறு மாதங்களில் 2,000 பேர் பலி!

கொழும்பு, ஜூன் 21

இந்த வருடத்தில் கடந்த ஆறு மாதங்களில் சுமார் 2 ஆயிரம் பேர் வீதி விபத்துகளில் உயிரிழந்துள்ளனர் என்று போக்குவரத்துக்குப் பொறுப்பான துணைப் பொலிஸ் கண்காணிப்பாளர் இந்திக ஹபுகோட தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு சாலை விபத்துகளால் ஏற்பட்ட இறப்புகளுக்கு கூடுதலாக, 7 ஆயிரத்து 152 பேர் படுகாயமடைந்துள்ளனர். இந்த ஆண்டின் ஜூன் 15ஆம் திகதி வரையான 6 மாதங்களில் ஆயிரத்து 133 அபாயகரமான சாலை விபத்துக ளில் சுமார் 2,000 பேர் மரணித்துள்ளனர். இது மிகவும் பேரழிவுதரும் சூழ்நிலை என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



நாளை
ஞாயிற்றுக்கிழமை - ஆனி 07
22.06.2025
சுபநேரம் : 08.54- 10.24
ராகுகாலம் : 04.24-05.54

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# நன்னடத்தை நிலையம் ஆளுநர் கண்காணிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 21
அச்சுவேலியில் வடக்கு மாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்புத் திணைக்களத்தால் இயக்கப்படும் சான்றுபெற்ற சிறுவர் பாடசாலைக்கு வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கண்காணிப்புப் பயணமொன்றை மேற்கொண்டார்.
சான்றுபெற்ற சிறுவர் பாடசாலையில் தங்கவைக்கப்பட்டுள்ள சிறுவர்களுடன் கலந்துரையாடி அவர்களின் தேவைகளைக் கேட்டறிந்துகொண்டார்.
பின்னர் அதே வளாகத்தில் இயங்கிவரும் மாகாண சுதேச வைத்தியத்துறைத் திணைக்களத்தின் வைத்தியசாலைகளையும் ஆளுநர் பார்வையிட்டார்.
இதேவேளை, உயிர்க்கொல்லிப் போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கான மறுவாழ்வு நிலையத்தை அச்சுவேலியில் அமைப்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-22,66)

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 21
இணுவில் பொதுநூலகத்தின் இந்த ஆண்டுக்கான வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும் இன்று சனிக்கிழமை இரவு 7.30 மணியளவில் நூலகத் தொழில்நுட்ப விரிவுரை மண்டபத்தில் நடைபெறும். உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-41)




# கிழக்கில் இராணுவம் வசமுள்ள மக்கள் காணிகளை விடுவிக்குக!

## பாதுகாப்புசார் ஆலோசனைக் குழுக்கூட்டத்தில் சாணக்கியன் கோரிக்கை

**மட்டக்களப்பு, ஜூன் 21**
**கிழக்கு மாகாணத்தில் இராணுவம் கையகப்படுத்தியுள்ள மக்களின் காணிகளை உடன்விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பாதுகாப்பு அலுவல்கள் அமைச்சுசார் ஆலோசனைக் குழு ஜனாதிபதி தலைமையில் கூடியபோது நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் சுட்டிக்காட்டிக்காட்டியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
மட்டக்களப்பு மாவட்டத்தின் முறக்கொட்டாஞ்சேனையில் உள்ள பாடசாலை, பாலயடிவத்தை பிரதேசத்திலுள்ள வர்த்தகச் சந்தை, குருக்கள் மடம் பகுதியிலுள்ள பாடசாலை ஆகியன இன்றளவிலும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் காணப்படுகின்றன. தாண்டியடி விசேட அதிரடிப்படை முகாம் மயானம் அமையப்பெற்றுள்ள காணியிலும், களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையம் தனியாருக்குச் சொந்தமான காணியிலும் அமையப்பெற்றுள்ளன.
ஆலையடிப் பிரதேசத்தில் நெல் சந்தைப்படுத்தல் சபையும் இராணுவ முகாமுக்குள் அமைந்து காணப்படுவதுடன், இராணுவ முகாமுக்குள் அமைந்துள்ள சில பாடசாலைகளுக்குப் பதிலாக மாற்றுப் பாடசாலைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளபோதிலும் அவை கிராமத்துக்கு வெளியில் அமைந்துள்ள காரணத்தினால் பல சிக்கல்களை மாணவர்கள் மற்றும் ஊர்மக்கள் சந்திக்கின்றனர்.
எனவே இந்தக் காணிகள் தொடர்பான விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டு விடுவிக்கப்படவேண்டும்- என்றார்.
இதன்போது அனைத்து இராணுவ முகாம்களும் அமைந்துள்ள காணிகள் குறித்து மீளப் பரிசீலனை செய்து அறிக்கை ஒன்றினை வழங்குமாறும் அந்த அறிக்கை கிடைத்தவுடன் அதன் அடிப்படையில் மீண்டும் கலந்துரையாடல் நடத்தப்படும் எனவும் சபைத் தவிசாளர் தெரிவித்தார். (ச-26)

# நெல்லுக்கான நியாயமான விலை; விவசாயிகளுக்கு கிடைக்கவேண்டும்

## கிளிநொச்சியில் விவசாய அமைச்சர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூன் 21
விவசாயிகள் பயிர்ச்செய்கையில் ஆர்வம் காட்டவேண்டுமாக இருந்தால் அவர்களுக்கு நியாயமான விலை கிடைக்கவேண்டும் என்று விவசாய அமைச்சர் கே.டி லால் காந்த தெரிவித்துள்ளார். கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் பா.தேவரதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
நாட்டில் உணவுப் பாதுகாப்பை மேம்படுத்தி உணவு உற்பத்தியை அதிகரிப்பதே எமது நோக்கம். நெல்லுக்கு உத்தரவாத விலை வழங்கவேண்டும் என விவசாயிகளிடம் கோரிக்கை இருந்தது. அதன் அடிப்படையில் நெல்லுக்கு 120 ரூபா உத்தரவாத விலையை வழங்கினோம். அதனைப்பார்த்த தனியார் அதனைவிட அதிகமான விலைக்கு நெல்லைக் கொள்வனவுசெய்தனர்.
விவசாயிகள் பயிர்ச்செய்கையில் ஆர்வம்காட்டவேண்டுமாக இருந்தால் அவர்களுக்கு நியாயமான விலை கிடைக்கவேண்டும். இந்த வேலைத்திட்டத்துக்காக 600மில்லியன் ஒதுக்கியுள்ளோம் - என்றார். (ச-113)

# ஆங்கிலக் கற்கைநெறி

யாழ்ப்பாணம், ஜூன் 21
வடமாகாண கல்வி அமைச்சின்கீழ் இயங்குகின்ற எஸ்.ரி.இ.பி.எஸ். நிறுவனத்தினால் கடந்த 2024 க.பொ.த. உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான ஆங்கிலக் கற்கைநெறி எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 18ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. ஆர்வமுள்ள மாணவர்கள் எதிர்வரும் ஜூலை மாதம் 19ஆம் திகதிக்கு முன்னர் நாவலர் வீதியில் அமைந்துள்ள எஸ்.ரி.இ.பி.எஸ். நிறுவனத்தில் நேரிலோ அல்லது 021222 4580 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலமாகவோ அல்லது stepsmoe@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி மூலமாகவோ பதிவுகளை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. கற்கைநெறியைப் பூர்த்திசெய்யும் மாணவர்களுக்கு வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் சான்றிதழ்கள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-41)

# திண்மக்கழிவகற்றல் பிரச்சினை; மாற்றிடம் தெரிவு; விரைவில் தீர்வு

## நல்லூர்ப் பிரதேசசபைத் தவிசாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 21
நல்லூர்ப் பிரதேசசபைக்குட்பட்ட பகுதியில்நிலவிவரும்திண்மக்கழிவகற்றல் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முகமாக விரைவில் காரைமுனங்கு இந்து மயானத்துக்கு அருகில் திண்மக்கழிவுகளை தரம் பிரிக்கும் நிலையம் அமைக்கப்படும் என நல்லூர்ப் பிரதேசசபை தவிசாளர் பத்மநாதன் மயூரன் தெரிவித்துள்ளார்.
நல்லூர்ப் பிரதேசசபை அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
நல்லூர்ப் பிரதேசசபைக்குட்பட்ட பகுதியில் மிக நீண்டகாலமாக செய்யப்பட்டு வந்த திண்மக்கழிவகற்றல் பொறிமுறைக்குப் பொருத்தமான இடம் இல்லாத காரணத்தால் தற்போது சிக்கலான நிலை ஏற்பட்டுள்ளது. தற்சமயம் அதற்கான தீர்வாக மாற்றிடமொன்றுக்கு சுற்றுச்சூழல் அதிகாரசபையினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மாவட்டச் செயலாளர் மற்றும் நல்லூர்ப் பிரதேச செயலாளரின் முயற்சியால் இதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. அந்த அமைவிடத்தில் சீரமைப்புப் பணிகள் இடம்பெறுவதன் காரணமாக அது முடிவடைய இன்னமும் இரண்டு மூன்று மாதங்கள் தேவைப்படுகின்றன. ஓரிரு வாரங்கள் பெரிய சவாலை எதிர்நோக்கவேண்டியுள்ளது. அதன் பின்னர் முழுமையான வினைத்திறனாக திண்மக்கழிவகற்றலை மேற்கொள்வோம் என்பதை உறுதியுடன் கூறுகிறோம் - என்றார். (ச-125)

# பாஷையூர் சந்தைத்தொகுதி யாழ்.மாநகர மேயர் பார்வை

யாழ்.மாநகரசபையின் பாஷையூர் சந்தைத் தொகுதிக்கு முதல்வர் மதிவதனி விவேகானந்தராசா கடந்த புதன்கிழமை களவிஜயம் மேற்கொண்டு தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் குறைபாடுகள் குறித்து கேட்டறிந்தார். அத்துடன் மாநகரசபையின் ஏனைய சந்தைத்தொகுதிகள் மற்றும் நகர்ப்புற வர்த்தக நிலையங்களையும் முதல்வர் பார்வையிட்டார். (ச-22, 20)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்டங்கள் தோறும் புனர்வாழ்வு மையங்கள்

## அரசாங்கம் நடவடிக்கை

கொழும்பு, ஜுன் 21

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்காக ஒவ்வொரு மாவட்டங்களிலும் புனர்வாழ்வு மையங்களை அமைப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது என்று நீதியமைச்சர் ஹர்சன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களை சிறைக்குள் வைத்து எந்தப் பிரயோசனமும் இல்லை. அவர்களுக்கு சிகிச்சை அளித்து அவர்களை அதிலிருந்து விடுவிக்க வேண்டும்.

நாட்டில் தற்போது கந்தகாடு மற்றும் சேனபுர ஆகிய இடங்களிலேயே புனர்வாழ்வு மையங்கள் உள்ளன. அவை போதாது. ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்த நிலையங்களை அமைப்பதன் மூலம்தான் இந்த வேலைத்திட்டத்தை செய்யமுடியும். இதற்கான பணிகளை விரைவில் தொடங்கவுள்ளோம். இது சிறையில் காணப்படும் இடநெருக்கடிக்கும் தீர்வாக அமையும் - என்றார்.

(ச-75)


## வேலைவாய்ப்பு

Coordinators - இணைப்பாளர்கள் ஆண் / பெண்

பிரபல நிறுவனம் ஒன்றிற்கு இணைப்பாளர்கள் தேவை க.பொ.த (சா/த), (உ/த) தகைமைகள் அவசியம்.
வயது 25-35. சம்பளம் - அடிப்படை 25.000/=
நேர்முகத்தேர்வு - 23.06.2025, 24.06.2025 காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

தொடர்பு - 077 570 4893


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 30 . 03 . 1962



உதிர்வு 01 . 07 . 2024

**அமரர் சண்முகநாதன் மனோகரன்**

(New கந்தசாமி ஸ்ரோர்ஸ் உரிமையாளர் - பலாங்கொடை)

**திதி : 21.06.2025**

ஓராண்டு நகர்ந்தாலும்
நம்மை விட்டு அகலாது உங்கள் நினைவு
நினைவுகள் வருகையில்
நிலைகுலைந்து போகின்றோம்
உங்களை நினைக்காத நொடிகளில்லை
அன்பினால் பண்பினால் நட்பினால்
ஆளுமையால் எங்கள் அனைவரது உள்ளங்களில்
குடியிருக்கும் எம் தெய்வமாய் நாம்
என்றென்றும் நினைத்திருப்போம்

வட்டுவினி மேற்கு
இணுவில்

குடும்பத்தினர்

(CS 58620) E

## மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 09 . 1955



மறைவு 20 . 06 . 2025

**பிரம்மஸ்ரீ D. சுவாமிநாத ஐயர் (சந்திரன் ஐயா)**

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் குருக்கள் பரம்பரையைச் சேர்ந்தவரும், காலஞ்சென்ற துரைச்சாமிக் குருக்கள் பச்சைநாயகி அம்மாள் தம்பதிகளின் செல்வப் புதல்வனுமாகிய பிரம்மஸ்ரீ D.சுவாமிநாத ஐயர் (சந்திரன் ஐயா) அவர்கள் நேற்று (20.06.2025) வெள்ளிக்கிழமை அதிகாலை 12.30 மணியளவில் இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற, நல்லூர், "வித்யாசாகர", "நியாய சிரோன்மணி" கி. சுப்ரம்மண்ய சாஸ்திரிகள் கமலாதேவி தம்பதிகளின் மருமகனும், நிர்மலா தேவியின் அன்புக் கணவரும், ஜெய்முகேஷ் (கொ/பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி), ஜெய்மயூரி (கொ / இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இந்துமதி, ஜெகதீஸ்வர ஐயர், இரத்னகைலாசநாத சர்மா (நாதன் ஐயா) ராதாகிருஷ்ண ஐயர், கஜலக்ஷ்மி, சீதாலக்ஷ்மி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ராதாகிருஷ்ண சர்மா, பாலகிருஷ்ண சர்மா, நவநீத கிருஷ்ண சர்மா, துவாரகநாத் துக்ரால், திவாகரன், காலஞ்சென்ற பிரபாகரன் மற்றும் லக்ஷ்மி தேவி, சரஸ்வதி தேவி, நந்தினி தேவி, விசாலாக்ஷி தேவி, கல்யாணி, மகாலக்ஷ்மி, கலைவாணி, கேமலாதேவி, ஜெயகௌரி ஆகியோரின் மைத்துனரும், சித்ராங்கி, வித்யாசாகர், வர்ஷிணீ, கிஷோர், சுஜய், கிரிஷ், பரத், ஸ்நேஹா, நிதேஷ், காலஞ்சென்ற அக்ஷை மற்றும் அபிஷேக் ஆகியோரின் பாசமிகு மாமாவும், சாகித்யா, ஸ்தோத்ரா, ஆகாஷ், காவ்யா, விகாஷ், விலோகிதன், அபிராமி, ஸ்கந்தா, முகுந்தா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், ஜயகிருஷ்ணன், ஜயராமன், மைதிலிதேவி, அன்னபூர்ணா, கைலாஷ் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 7/9A, பண்டாரக்குளம் மேற்கு ஒழுங்கை, கோவில் வீதி, நல்லூர் இல்லத்திலிருந்து நாளை (22.06. 2025) ஞாயிற்றுக்கிழமை காலை 7:30 மணிக்கு கிரியைகள் ஆரம்பித்து தகனக் கிரியைகளுக்காக முற்பகல் 10.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**

திருமதி நிர்மலா தேவி சுவாமிநாத ஐயர் (மனைவி) - 0776056893
திரு. இரத்னகைலாசநாத சர்மா - (நாதன் ஐயா - சகோதரன்) - 0777723646

*CS/58626) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 03 . 1943



மறைவு 19 . 06 . 2025

**கந்தையா கனகசபை**

**(உத்தரவு பெற்ற பட்டய நில அளவையாளர், நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர், சமாதான நீதிவான்)**

மீசாலை, வடக்கு மீசாலையைப் பிறப்பிடமாகவும் 125 பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா கனகசபை அவர்கள் கடந்த 19.06.2025 வியாழக்கிழமை சந்நிதியான் திருவடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - மீனாட்சி தம்பதிகளின் பாசமிகு மகனும், சிதம்பரப்பிள்ளை - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், விமலாதேவியின் ஆருயிர்க் கணவரும், காலஞ்சென்றவர்களான இராசையா, சோமசுந்தரம், வேலுப்பிள்ளை, நாகராசா ஆகியோரதும் மற்றும் கந்தசாமியின் அன்புச் சகோதரனும், அன்னப்பிள்ளை, காலஞ்சென்ற நாகேஸ்வரி, கேமலதா, சிவயோகராணி, காலஞ்சென்ற கமலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், முருகவேள், சிறிஸ்கந்தவேள், காலஞ்சென்ற திருமகள், இளங்கோவேள், எழில்வேள் ஆகியோரின் பாசமிகு தந்தையும், நித்யா, பிரியா, வைஷ்ணவி, ரஞ்ஜனி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஹரிபிரசாத், பைரவி, குந்தவி, பார்கவி, யுவருதன் ஆகியோரது பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.06.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவிலல் பிறவுண் வீதியில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனகிரியைக்காக மீசாலை வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**இல : 125 பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.**

**தகவல் :
குடும்பத்தினர்**

(CS 3185) D

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டு விழா

கோப்பாய் சமூக சேவா சங்கம், பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும் இணைந்து நடத்தும் விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3மணியளவில் பாலர் பகல் விடுதி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

க.பரமதனந்தராசா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் விருந்தினர்களாக கோப்பாய் வடக்கு கிராம உத்தியோகத்தர் சுப்பிரமணியம் சண்முகவடிவேல், கோப்பாய் எம்.ஓ.எச். உதவி மருத்துவர் எல்.எச்.டபிள்யூ, தேவசுரேந்திரா, நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்கள மாகாண ஆணையாளர் திருமதி சுஜிவா சிவதாஸ், பாதுகாவலர் பாலர் பகல் விடுதி, யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய அதிபர் அமிர்தலிங்கம் கஜேந்திரன், இலங்கை வங்கி ஓய்வு பெற்ற பிரதான முகாமையாளர் சுப்பிரமணியம் செல்வேந்திரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-41)

## நல்லூர்க் கந்தன் திருமண சேவை

எம்மிடம் அனைத்து இனத்தவருக்குமான மணமக்கள் கைவசம் உண்டு நீங்கள் விரும்பிய வாறு துரிதமாக மணமக்களை தெரிவு செய்யலாம்.

குறிப்பு - 1990ம் ஆண்டு மணமகன் ஆயிலியம் செல் X மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு / வி. ஜெயந்தி - 077 973 3183

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு பிற்போடல்



### வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்

குரும்பசிட்டியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கடந்த (22.05.2025) வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த அமரர் வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் (21.06.2025) சனிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் (23.06.2025) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்திலும் நடைபெற இருந்தது. இவ் நிகழ்வானது தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவருக்கும், தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவ் நிகழ்வு தொடர்பான அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும்.

குடும்பத்தினர். 077 278 1098, 021 224 2517

## காணி விற்பனைக்கு

**யாழ் சுண்டுக்குளி மோரிஸ் ஒழுங்கையில் புதிதாக பிரிக்கப்பட்ட காணித் துண்டுகள்**

- கொழும்புத்துறை சாலைக்கு மிக அருகில்
- சிறந்த சூழல்
- அகலமான சாலை - 15 அடி & 20 அடி
- UDA அங்கீகரிக்கப்பட்டது
- உடனடி கட்டிடம் சாத்தியம்
- 1.4 பரப்பு X 6* துண்டுகள் (1ப 7கு)
- 1.33 பரப்பு X 2* துண்டுகள் (1ப 6கு)
- ஸ்ட்ரீட்லைன் சான்றிதழ்
- உரிமைச் சான்றிதழ்
- கையலிக்கப்படாமைக்கான நற்சாட்சி சான்றிதழ்
- மின் இணைப்புக்கான அனுகல்

**சில துண்டுகள் ஏற்கனவே விற்கப்பட்டுள்ளன. தரகர்கள் தேவையில்லை.**

தொடர்புகளுக்கு:
**077 711 5438, 076 156 2983**

## முக்கிய அறிவித்தல்

### அடகு நகை விற்பனை அறிவித்தல்
### ராஜ் ஜுவல்லர்ஸ் திருநெல்வேலி

01.01.2024 ஆம் திகதி தொடக்கம் 30.06.2024 ஆம் திகதி வரை அடகு வைத்த நகைகளை 31.07.2025 ஆம் திகதிக்கிடையில் மீட்டுக்கொள்ளவும். அல்லது முழு வட்டியையும் செலுத்தி புதுப்பித்துக்கொள்ளவும். தவறின் 31.07.2025 ஆம் திகதி விற்பனை செய்யப்பட்டுவிடும். அதன் பின் எக்காரணம் கொண்டும் மீட்க முடியாது என்பதை எமது வாடிக்கையாளருக்கு அறியத் தருகின்றோம்.

இல.31C ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (சந்தைக்கு அருகில்)
**021 221 7287, 076 636 1238**

(CS/3439) J-1

## கேள்வி அறிவித்தல்

### சாவகச்சேரி பிரதேசசபை மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதி (PSDG) மற்றும் முத்திரைத்தீர்வை வேலைத்திட்டம் (STAMP DUTY) கட்டம் II -2025

1. சாவகச்சேரி பிரதேசசபை சார்பாக பிரதேச பெறுகைக்குழுவின் தவிசாளர் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கு தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளரிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் கேள்விகளை கோருகின்றார்கள்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
3. விலைக்கேள்வியாளர்கள். நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) வீதி / கட்டடம் நிர்மாணத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு. இவ் விலைமனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை கொண்டுள்ளதும். கறுப்புப் பட்டியலில் (Black list) சேர்த்துக்கொள்ளப்படாததுமான கேள்விதாரருக்கு வழங்கப் படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
   விலைக்கேள்வியாளர்கள் பொது கொன்றாக் சட்டம் 1987 இல 03 ன் பிரகாரம் பதிவிகை மேற்கொண்டிருக்க வேண்டும்.
4. தகைமை பற்றிய தகவல்கள் பெறுகை ஆவணத்தின வகுதி 4 ல் குறிப்பிடப்பட்டுள்ளதோடு. மேலதிக தகைமைத் தேவைகளிற்கான வேலைகளுக்கு SBD 3 ற்கமைவாக பெறுகை ஆவணத்தின் அட்டவணை (Schedule -5) வகுதி 5 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.
5. கேள்விகள் சமர்ப்பிக்கும் போது பெறுமதிசேர் வரி (VAT) வலுவிலுள்ள சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறான ஆவணங்கள் உள்ளடங்கிய கேள்விதாரருக்கு மாத்திரமே வரிக் கொடுப்பனவை கோர முடியும்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் A9 வீதி கொடிகாமம் எனும் முகவரியிலுள்ள சாவகச்சேரி பிரதேசசபையில் (தொலைபேசி : 021-2050348, 0212050356 தொலைநகல் : 021-2050348) மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 2025.06.21 தொடக்கம் 2025.07.03 வரையான காலப்பகுதியில் வேலைநாட்களில் காலை 09:00 மணி முதல் 15:00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை உள்ளூராட்சி மன்ற பெறுகை குழு. சாவகச்சேரி பிரதேசசபை. A9 வீதி கொடிகாமம் எனும் முகவரியில் 2025.06.21 ஆம் திகதியிலிருந்து 2025.07.03 ஆம் திகதி வரை காலை 09:00 மணிக்கும் மாலை 14:00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா. 3,000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
8. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி. நகல்பிரதி என தனித்தனியாக உறைகளிட்டு தலைவர். உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு. சாவகச்சேரி பிரதேசசபை. A9 வீதி கொடிகாமம் எனும் முகவரிக்கு 2025.07.04 ஆம் திகதி மாலை 02:30 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விகள் அனைத்தும் அன்றையதினமே (2025.07.04) மாலை 2.30 மணிக்கு திறக்கப்படும். இதன்போது கேள்விதார் அல்லது அவரின் பிரதிநிதி (ஒருவர் மாத்திரம்) கலந்துகொள்ளமுடியும்.
9. கீழ் காட்டப்படும் கேள்விகள். கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து NP/14/41(6)/2/PSDG/2025/05, NP/14/41 (6)/2/STAMP/2025/01 இலக்க வேலைகளுக்கு 77 நாட்கள் (2025.09.19) வரையும் செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழ்வரும் அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும். கேள்வி பிணையானது அங்கிகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியினால் வழங்கப்படும் பிணைமுறி அல்லது எமது அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டு அல்லது நிர்மான உத்தரவாத நிதி (CGF) ஆகியன மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.
11. கேள்விகள் தொடஉபான முன்னோடிக் கலந்துரையாடல் 2025.06.27 திகதி மாலை 15:00 மணிக்கு பிரதேசசபை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் அனைவரும் இக்கலந்துரையாடலில் தமது சொந்த செலவில் கலந்து கொள்ள முடியும்.

| தொடர் இல | கேள்வி இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (வரி நீங்கலாக) ரூ.மில்லியன் | ஒப்பந்த காலம் (நாட்கள்) | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை வைப்பு (ரூபா) | கேள்விப் பிணை செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | NP/14/41(6)/2/STAMP/2025/01 | மிருசுவில் சந்தை வீதி புனரமைப்பு,மிருசுவில் | 4.43 | 84 | C8 or above (வீதி நிர்மாணம்) | 42500.00 | 2025.07.04-2025.10.17 வரை |
| 2 | NP/14/41(6)/2/PSDG/2025/05 | பொன்னம்பலம் வீதி புனரமைப்பு,மறவன்புலோ | 7.62 | 84 | C8 or above (வீதி நிர்மாணம்) | 77000.00 | 2025.07.04-2025.10.17 வரை |
| 3 | NP/14/41(6)/2/PSDG/2025/06 | வீதி மின் விளக்குகள் கொள்வனவு செய்தல் | 1.40 | 63 | C9 or above /வியாபாரப் பதிவுச் சான்றிதழ் | 14000.00 | 2025.07.04-2025.10.17 வரை |

2025.06.21
தலைவர்.
உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேசசபை.

## மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 05 . 1933 — மறைவு 15 . 06 . 2025



### சிவமணி சோமசுந்தரம்

காரைநகர் இடைப்பிட்டியை பிறப்பிடமாகவும் மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்ட சிவமணி சோமசுந்தரம் அவர்கள் (15.06.2025) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை (நெல்லுக்காரன்) - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்ற சோமசுந்தரம் (மட்டக்களப்பு Star Bakery) அவர்களின் அன்பு மனைவியும், சூரியப்பிரபா, காலஞ்சென்ற சூரியகுமார், சூரியகாந்தன், சூரியகலா, சுதாகரன், காலஞ்சென்ற சுதர்சன், சுபோசன், காலஞ்சென்ற சுரேந்திரன் ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்றவர்களான சுந்தரமூர்த்தி, சிவகலை, சிவபாக்கியம், சிவப்பிரகாசம், ஆகியோரின் அன்பு சகோதரியும், சிவகாமசுந்தரி, காலஞ்சென்றவர்களான செல்லப்பாஆறுமுகம், பாலசிங்கம், செல்வராணி, ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞயிற்றுக்கிழமை (22.06.2025) கனடாவில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் குடும்பத்தினர்

(CS/3447) D*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலைக் கட்டுப்படுத்துவதற்கு பெரும் சீர்திருத்தங்கள் தேவை

## சர்வதேச நாணயநிதியம் தெரிவிப்பு



**கொழும்பு, ஜூன் 21**
**இலங்கையில் ஊழலைக் கட்டுப்படுத்துவதற்குப் பெரும் சீர்திருத்தங்கள் தேவைப்படும் என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.**

சர்வதேச நாணயநிதியத்தின் முகாமைத்துவப் பிரதிப் பணிப்பாளர் கீதா கோபிநாத் கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் இதனைத் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
அரசாங்கத்தின் நிர்வாகச் சீர்திருத்தங்கள் தொடர்பான செயற்றிட்டத்தைச் செயற்படுத்துவது மிகவும் முக்கியமானது. வெளிப்புறக் கடனைக் குறைக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், உள்நாட்டுக்கடன் இன்னமும் அதிகமாக உள்ளது. அதைக் குறைப்பதற்கு சிறந்த நிதிக்கொள்கையை உறுதியாகச் செயற்படுத்துவது முக்கியமானது.
துணிச்சலான சீர்திருத்தங்கள் மற்றும் இலங்கை மக்களின் அர்ப்பணிப்புக் காரணமாக பொருளாதார நிலைத்தன்மையை மீட்டெடுப்பதிலும், மக்களின் கஷ்டங்களைக் குறைப்பதிலும் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.
எரிபொருள், சமையல் எரிவாயு மற்றும் மருந்துகள் மீண்டும் கிடைக்கின்றன. பணவீக்கம் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வரி வருமானம் மூன்றில் இரண்டு பங்குக்கும் அதிகமாக அதிகரித்துள்ளது - என்றார். (எ-இ)

# மனித உரிமை மீறப்பட்டுள்ளதாம்; மனுத்தாக்கல் செய்த பிள்ளையான்

கொழும்பு, ஜூன் 21
பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் தடுத்துவைக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையால் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்று உத்தரவிடக்கோரி முன்னாள் இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தன் (பிள்ளையான்) தாக்கல் செய்துள்ள அடிப்படை மனித உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.
இந்த மனு நாளைமறுதினம் திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த மனு உயர்நீதிமன்ற நீதியரசர்களான எஸ்.துரைராஜா, மேனகா விஜயசுந்தர மற்றும் சம்பத் விஜேரத்ன ஆகிய மூவர் அடங்கிய குழாம் முன்னிலையில் அழைக்கப்பட்டபோதே பிறப்பிக்கப்பட்டது.
சட்டமா அதிபர் சார்பில் மன்றில் முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சுஹர்ஷி ஹேரத் மன்றில் விடயங்களை முன்வைத்து இந்த மனு தொடர்பான முதற்கட்ட ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய இரு வார கால அவகாசம் கோரினார். ஆட்சேபனைகளை முன்வைக்க பிரதிவாதி தரப்புக்கு அனுமதி வழங்கிய நீதியரசர்கள் குழாம் மேலும் இது தொடர்பில் மனுதாரர் சார்பில் ஆட்சேபனைகள் இருக்குமாயின் அவற்றையும் ஒரு வார காலப்பகுதிக்குள் சமர்ப்பிக்கவேண்டும் என்று உத்தரவு பிறப்பித்துள்ளது.
சட்டத்தரணிகளை அணுகுவதைத் தடுப்பதன்மூலம் தனது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்று தீர்ப்பளிக்கவேண்டும் என்றும், தனது அடிப்படை உரிமைகளை மீறப்பட்டமைக்காக நூறு மில்லியன் ரூபா இழப்பீட்டைப் பெற்றுத்தரவேண்டும் என்றும் பிள்ளையான் தனது சட்டத்தரணிகள்மூலம் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். (எ-இ)

### ஹன்ரர்...

டைய முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
ஹன்ரர் ரக வாகனமும், மோட்டார்சைக்கிளும் மோதியதிலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (அ-ம-26)

### வலி.தென்மேற்கு...

கொண்ட வலிகாமம் தெற்கு,மேற்கு பிரதேசசபையில், இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு 8 ஆசனங்களும், தேசிய மக்கள் சக்திக்கு 6 ஆசனங்களும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு 5 ஆசனங்களும், தமிழ்த் தேசியப் பேரவைக்கு 4 ஆசனங்களும், தமிழ் மக்கள் கூட்டணிக்கு 2 ஆசனங்களும், ஈ.பி.டி.பி.க்கு 2 ஆசனங்களும், ஐக்கிய மக்கள் சக்திக்கு ஓர் ஆசனமும் கிடைத்திருந்தன.
சபையின் முதலாவது அமர்வு உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபுவின் முன்னிலையில் நேற்று நடைபெற்றது. இதன்போது தமிழரசுக் கட்சியின் சார்பில் கந்தையா யசீதனும், தமிழ்த் தேசியப் பேரவையின்கூட்டணியின் சார்பில் நாகராசா பகீரதனும் தவிசாளர் தெரிவுக்கு முன்மொழியப்பட்டனர்.
19:09 என்ற அடிப்படையில் பகிரங்க வாக்கெடுப்பை நடத்தத் தீர்மானிக்கப் பட்டது. இதில், கந்தையா ஜெசீதன் 13:09 என்ற அடிப்படையில் வெற்றிபெற்று தவிசாளராகத் தெரிவுசெய்யப்பட்டார்.
உபதவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேரின்பநாயகம் சுபாகர் தெரிவுசெய்யப்பட்டார். (அ-ம-125)

### யாழ். மாவட்டச்...

நியமிப்பதற்கு தற்போது அமைச்சரவையின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
இவருக்கான நியமனக் கடிதம் அமைச்சரவையின் செயலாளர் டபிள்யூ.எம்.டி.ஜே.பெர்னாண்டோவால் அமைச்சரவை அலுவலகத்தில் வைத்து நேற்று வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டது. (அ-ம-66-125-27)

# மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு தலைவர், நீதியரசர்கள் நியமனம்

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் புதிய தலைவராக சிரேஷ்ட மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி நளின் ரொஹாந்த அபேசூரிய நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார். இதே வேளை, மேல் நீதிமன்ற நீதிபதி தொன் பிரான்சிஸ் ஹத்துருசிங்க குணவர்தன மற்றும் மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய காந்த மத்தும படபெந்திகே ஆகியோர் புதிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களாக இன்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர். (ச-இ)



யாழ்.கோட்ட மட்ட தமிழ்த்தின வினாவிடைப் போட்டியில் கொழும்புத் துறை இந்து மகா வித்தியாலயம் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது. (ச-17)



# மீள்குடியேற்ற ஒழுங்குமுறைகளை உருவாக்க வழிவகுக்கவேண்டும்

## வடக்கு ஆளுநரிடம் ஏதிலிகள் மறுவாழ்வு நிறுவனம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 21
இந்தியாவிலிருந்து மீள் திரும்புகின்ற மக்களுக்கு நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் வகையில் அரசாங்கத்தின் சகலநிலை அதிகாரிகளையும் உள்ளடக்கி மக்களின் தேவைகள் தொடர்பான தெளிவூட்டல்கள் வழங்கப்படவேண்டும். நிலைத்த மீள்குடியேற்றம் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதலின் அவசியம் பேணப்படவேண்டும் என்று இலங்கை ஏதிலிகள் மறுவாழ்வு நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.
வடக்கு ஆளுநருடன் கடந்த திங்கட்கிழமை யாழ். சுண்டுக்குளியில் அமைந்துள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.
கடந்த 10 ஆண்டுகளில் இலங்கை அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மீள்குடியேற்ற ஒழுங்குமுறை தொடர்பாக விசேட அமைச்சரவை அங்கீகாரம் பெறப்படவேண்டிய முக்கியத்துவம் கலந்துரையாடப்பட்டது.
இதற்காக இலங்கை ஏதிலிகள் மறுவாழ்வு நிலையத்தால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணமும் மாகாண மட்டக் கலந்துரையாடலில் பெறப்பட்ட விடயங்கள் தொடர்பான ஆவணங்களும் பரிசீலிக்கப்பட்டு ஓர் ஆவணமாகத் தயாரிக்கப்பட்டு அரச உயர் அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் கருத்துகள் பெறப்பட்டு அமைச்சரவை ஊடாக ஜனாதிபதியின் பார்வைக்குச் சமர்ப்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மீள்குடியேறும் மக்களுக்கான வீட்டுத்திட்டம், வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதாரம் தொடர்பான விசேட தேவைகளை எவ்வாறு பெற்றுக்கொடுக்கலாம் என்பதையும், நிலைத்த மீள்குடியேற்றம் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதலின் அவசியம் தொடர்பாக செயலாற்ற வேண்டிய தேவைகள் தொடர்பாகவும் குறித்த கலந்துரையாடலில் வலியுறுத்தப்பட்டது. (ச-66,113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழைப் பிரதேசத்தின் குறைகளை நிவர்த்தியுங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 21

**தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவில் காணப்படுகின்ற அடிப்படைத் தேவைகளின் குறைபாடுகளை நிவர்த்திசெய்யவேண்டும் என்றும் மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

தெல்லிப்பழைப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் அண்மையில் இடம்பெற்றபோதே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. மயிலிட்டி வடக்கு கிராம அலுவலர் பிரிவில் ஆரம்ப சுகாதார நிலையம் இன்மை, குடும்பநல உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பற்றாக் குறை, பலாலி ஆரம்ப சுகாதார நிலையத்துக்கான சுற்றுமதிலின்மை, குட்டியபுலம் ஆரம்பசுகாதாரநிலையத்துக்கான திருத்தவேலைகள் மேற்கொள்ளப்படாமை உள்ளிட்ட குறைபாடுகள் காணப்படுகின்றன. இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர் என்றும் பொதுமக்கள் சுட்டிக்காட்டினர்.

இவை குறித்து பரிசீலிப்பதாக ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் தெரிவித்தார். (ச-125)



# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வு

கொழும்பு, ஜூன் 21

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் ஆசிரியர் சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல் கலந்துகொண்டு மகாபாரதம் எனும் தலைப்பில் தொடர் சொற்பொழிவின் ஒரு பகுதியை நிகழ்த்தினார். (ச-66)

# தினக்குரல் 'கார்ட்டூனிஸ்ட்' மூர்த்தி காலமானார்

யாழ்ப்பாணம், ஜூன் 21



தினக்குரல் உள்ளிட்ட பல்வேறு பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளில் நீண்ட காலமாக கருத்தோவியராக பணியாற்றிய அம்மையப்ப பிள்ளை யோகமூர்த்தி (கார்ட்டூனிஸ்ட் மூர்த்தி) வயோதிபம் காரணமாக கடந்த வியாழக்கிழமை காலமானார்.

1970ஆம் ஆண்டுகளில் கொழும்பிலிருந்து வெளியாகிய பிரபல தமிழ், நகைச்சுவை சஞ்சிகையாகிய 'சிரித்திரன்' சஞ்சிகையில் கருத்தோவியங்கள், நகைச்சுவை துணுக்குகள், கட்டுரைகள் மற்றும் கவிதைகளை வெளியிட்டதன் மூலம் இவர் தனது ஊடகப் பணியை ஆரம்பித்திருந்தார்.

இவர் இதுவரையில் சுமார் 5 ஆயிரம் அரசியல் கேலிச் சித்திரங்கள் மற்றும் சுமார் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆங்கில, சிங்கள மொழிபெயர்ப்புகளை 'தினக்குரல்' பத்திரிகையிலும் 'வீரகேசரி' பத்திரிகையிலும் வெளியிட்டுள்ளார். (ம-இ)





# புதுக்குடியிருப்பில் யோகாதினம்!

முல்லைத்தீவு, ஜூன் 21

முல்லைத்தீவு மாவட்டச் செயலகமும், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து நடத்திய சர்வதேச யோகா தினமும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நேற்று புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் நடைபெற்றன. இலங்கை யோகாப் பயிற்சி கல்லூரியின் இயக்குநரும் யோகா, சிலம்பம், கராத்தே, வர்மக்கலை, அடிமுறைக்கலை மாஸ்டருமான ஜெயம் ஜெகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்தியத்துணைத் தூதுவர் சாய் முரளி, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திலகநாதன் ஆகியோர் பங்கேற்றனர். (ச-19)

# ஐஸ் போதைப்பொருள் 2 இளைஞர்கள் கைது

*யாழ்ப்பாணம், ஜூன் 21*

*யாழ்ப்பாணம் காங்கேசன்துறை பகுதிக்குட்பட்ட பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*காங்கேசன்துறை பிராந்திய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.*

*சந்தேகநபர்கள் இருவரும் 25 மற்றும் 26 வயதுடையவர்கள் என்றும், அவர்களிடம் இருந்து 11 கிராம் 05 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.* *(ம-26)*





# வடமராட்சி இந்து மகளிர் கல்விக்கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்ப்பாணம் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் 2025 ஆம் ஆண்டுக்கான கல்விக்கண்காட்சி கல்லூரி அதிபர் திருமதி கி.குலசங்கர் தலைமையில் நேற்றுக் கல்லூரியில் இடம்பெற்றது.

விருந்தினர்கள் மலர்மாலை அணிவித்து விழா மண்டபம் வரை அழைத்துவரப்பட்டு மங்கல சுடர்கள் ஏற்றலுடன் ஆரம்பமானது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக்கல்வி அலுவலக பிரதிக் கல்விப்பணிப்பாளர் ப.அருந்தவச்செல்வன், சிறப்பு விருந்தினராக வடமராட்சி இந்துமகளிர் கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியர் சி.புஸ்பராசா ஆகியோர் கலந்துகொண்டு நிகழ்வை ஆரம்பித்துவைத்தனர். (ச-27)

# பாடசாலை உணவுத்திட்டத்தின் நடைமுறைச் சவால்கள் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூன் 21

உலக உணவுத்திட்டத்தின்கீழ் கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பாடசாலை உணவுத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதன்போது பாடசாலை மாணவர்களுக்கான உணவு வழங்கல் திட்டத்தை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது தொடர்பிலும் திட்டத்தின் நடைமுறையாக்கலிலுள்ள சவால்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டன.



கலந்துரையாடலில் கிராமிய சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் செயலர் சம்பத் மந்திரிநாயக்க, வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் மு.நந்தகோபாலன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜெயராணி பரமோதயன், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ஆ.சிறி, பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் திட்டமிடல் பணிப்பாளர் கே.சிவச்சந்திரன், பிரதித் திட்டப் பணிப்பாளர் திருமதி கே.நிறஞ்சலா, தேசிய உலக உணவு நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பாளர் முஸ்தபா நிஹமத் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-41-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செம்மணிப்...

முன்னெடுக்கப்பட்டது. வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில், வடக்கு - கிழக்கின் எட்டு மாவட்டங்களையும் சேர்ந்த சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், சமூகச் செயற்பாட்டாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

'செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் எந்தத் தாமதமும் இல்லாமல் நீதி உடனடியாக நிலைநாட்டப்படவேண்டும். பட்டலந்த வதைமுகாம்களில் இடம்பெற்ற படுகொலைகள் மற்றும் சித்திரவதைகளை விசாரிப்பதிலும், அதற்குக் காரணமானவர்களைத் தண்டிப்பதிலும் ஆர்வம் காட்டும் அரசாங்கம் செம்மணிப் புதைகுழி விவகாரத்தில் மௌனமாயும், மெத்தனப் போக்குடனும் இருப்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது. இந்தப் புதைகுழி தொடர்பான அனைத்து விடயங்களும் வெளிவரவேண்டும். குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும்' என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினார்கள்.

போராட்டம் இடம்பெற்ற பகுதியில், பொலிஸாரும், புலனாய்வாளர்களும் குவிக்கப்பட்டிருந்ததால் அந்தப் பகுதியில் நேற்றுப் பரபரப்பு ஏற்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-125-66)

## மனிதப்...

மூன்று தினங்கள் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

'அணையா விளக்குப் போராட்டம்' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தப் போராட்டம் தமிழர்களது பண்பாட்டில் நம்பிக்கை சார்ந்த மரபாக இருக்கின்ற அணையா விளக்கினை முன்னிலைப்படுத்தியே மேற்கொள்ளப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

1995ஆம் ஆண்டிலிருந்து 2025ஆம் ஆண்டு வரை செம்மணிப் பகுதியில் பல்வேறு இடங்களிலும் மனிதப் புதைகுழிகள் அகழப்பட்டுள்ளபோதிலும், அது குறித்த மர்மம் இருள் சூழ்ந்ததாகவே காணப்படுகிறது. இன அழிப்புக்கு ஆதாரமான இந்தக் குற்றச் செயல்களுக்கான காரணமோ, இதற்கு அதிகாரம் வழங்கிய தரப்புக்கள் யார் என்பதோ, மீளவும் இது போன்ற மனிதப் புதைகுழிகள் உருவாக்கப்படாது என்பதற்கான பொறுப்புக்கூறலோ வெளிப்படுத்தப்படவில்லை. எனவே, இருள் சூழ்ந்திருக்கும் செம்மணி மனிதப் புதைகுழி விடயத்துக்கு ஒளி பாய்ச்சப்படல்வேண்டும் என்கிற குறியீட்டு அர்த்தத்திலேயே இந்தப் போராட்டத்தில் தொடர்ச்சியாக மூன்று தினங்கள் எரியக் கூடிய அணையா விளக்கு ஏற்றப்படவுள்ளது - என்று ஏற்பாட்டாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (அ-ம-26-125)

## எம்.பி....

கடிதத்தை நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர மற்றும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவருக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளார். தேசிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக சபைக்கு வந்த ஹர்ஷன சூரியப்பெரும, நிதி மற்றும் திட்டமிடல் பிரதியமைச்சராக பதவி வகித்தார்.

நிதி அமைச்சின் செயலாளராக பதவி வகித்த மஹிந்த சிறிவர்த்தன சேவையில் இருந்து ஓய்வுபெற்றுச் சென்றுள்ள நிலையில், அந்த இடத்துக்கு ஹர்ஷன சூரியப்பெரும நியமிக்கப்படவுள்ளார். அதற்காகவே எம்.பி. பதவியை துறந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## குடும்பத்...

யைச் சேர்ந்த கதிரவேற்பிள்ளை கண்ணதாசன் (வயது-57) என்ற குடும்பத்தலைவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

பாடசாலைக் காவலாளியான அவர், கடந்த 10ஆம் திகதியன்று நண்பர்கள் சிலருடன் இணைந்து இரவு உணவு அருந்தியுள்ளார். இதன்போது வாய்த்தர்க்கம் ஏற்பட்டதைத் தொடர்ந்து அவரின் தலையில் மண்வெட்டிப் பிடியால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

படுகாயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நிலையிலேயே நேற்று உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## எகிறியது...

காலமும் ஆயிரம் ரூபாவுக்கு பத்து ரூபா முத்திரைக்கட்டணமாக அறவிடப்பட்டு வந்த நிலையில், இனிவரும் காலத்தில் ஆயிரம் ரூபாவுக்கான முத்திரைக்கட்டணம் இருபது ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது. கடந்த 17ஆம் திகதி நாடாளுமன்றத்தில் கூடிய நிதிக்குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (அ-ம-6)

## ஜூன் 30...

பட்டுள்ளது. 2024ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் 11ஆவது பிரிவுக்கு அமைய அரசாங்கத்தினால் நிதி செயல் நுணுக்கக் கூற்று ஜூன் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்படவேண்டும் என்ற தேவையைப் பூர்த்திசெய்யும் நோக்கிலேயே இவ்வாறு நாடாளுமன்றம் கூடவுள்ளது.

அத்துடன், ஜூலை மாதம் 8, 9 மற்றும் 11ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-ம-44)

## படுகாயமடைந்திருந்த...

சுவாமிநாதஜயர் (வயது-68) சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் இந்தியத் துணைத்தூதரகத்தில் பணியாற்றிய பிரபாகர குருக்கள் சம்பவ இடத்தில் உயிரிழந்தார். அவரின் மனைவியும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளருமான சீதாலஸ்மி, அவர்களுடைய மகன் அக்ஷய், சீதாலக்ஷ்மியின் மாமனாரான துரைசாமிக் குருக்கள் சுவாமிநாதஜயர் ஆகியோர் படுகாயமடைந்தனர்.

சிகிச்சையின்போது ஜூன் மாதம் முதலாம் திகதியன்று அக்ஷய் உயிரிழந்திருந்த நிலையில் தற்போது, துரைசாமிக் குருக்கள் சுவாமிநாதஜயரும் உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## வேலணை...

யின் முதலாவது அமர்வு உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபுவின் முன்னிலையில் நேற்று நடைபெற்றது.

22 ஆசனங்களைக் கொண்ட இந்தச் சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு 8 ஆசனங்களும், தேசிய மக்கள் சக்திக்கு 4 ஆசனங்களும், ஈ.பி.டி.பி.க்கு 3 ஆசனங்களும், தமிழ்த் தேசியப் பேரவைக்கு 2 ஆசனங்களும், தமிழ் மக்கள் கூட்டணி, ஐக்கிய தேசியக் கட்சி, சுயேச்சைக்குழு 1, சுயேச்சைக்குழு 2, சுயேச்சைக்குழு 3 ஆகியவற்றுக்குத் தலா ஓர் ஆசனமும் கிடைத்திருந்தன.

தவிசாளர் தெரிவுக்கு தமிழரசுக் கட்சியின் சார்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிவலிங்கம் அசோக்குமார் முன்மொழியப்பட்டிருந்தார். அவர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். உபதவிசாளராக தமிழரசுக் கட்சியின் கணபதிப்பிள்ளை வசந்தகுமார் தெரிவுசெய்யப்பட்டார். (அ-ம-26)

## ஊர்காவற்றுறையில்...

ஊர்காவற்றுறை பிரதேசசபையின் முதலாவது அமர்வு உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபுவின் முன்னிலையில் நேற்று நடைபெற்றது. 13 ஆசனங்களைக் கொண்ட ஊர்காவற்றுறை பிரதேசசபையில், தமிழ்த் தேசியப் பேரவை 3 ஆசனங்களையும், தமிழரசுக் கட்சி 2 ஆசனங்களையும், ஈ.பி.டி.பி. 4 ஆசனங்களையும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஓர் ஆசனத்தையும், தேசிய மக்கள் சக்தி 3 ஆசனங்களையும் கைப்பற்றியிருந்தன.

தமிழ்த் தேசியப் பேரவையின் சார்பில் அன்னலிங்கம் அன்னராசா தவிசாளர் பதவிக்கு முன்மொழியப்பட்டார். தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் ஜெயதீஸ்வரன் யுகந்தனை ஈ.பி.டி.பி. முன்மொழிந்தது.

அன்னலிங்கம் அன்னராசாவுக்கு பேரவையின் உறுப்பினருடன் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் ஒருவரும் வாக்களித்தனர். ஜெயதீஸ்வரன் யுகந்தனுக்கு ஈ.பி.டி.பி.யின் வாக்குகளும், அவருடைய சொந்த வாக்கும் பதிவாகின. இதையடுத்து 5:5 என்ற நிலையில், திருவுளச்சீட்டின் மூலம் வெற்றியைத் தீர்மானிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. இதனடிப்படையில் பேரவை வெற்றிபெற்று ஆட்சியமைத்தது.

உபதவிசாளராக தமிழரசுக் கட்சியின் மற்றைய உறுப்பினரான செபஸ்ரியாம்பிள்ளை லெனின் ரஞ்சித் தெரிவுசெய்யப்பட்டார். (அ-ம-26)

## செம்மணிப் புதைகுழி...

அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில், கடந்த பெப்ரவரி மாதம் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியில் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய அண்மையில் அகழ்வுப்பணிகள் இடம்பெற்றன. மூன்று குழந்தைகளின் மனிதச் சிதிலங்கள் உட்பட 19 மனிதச் சிதிலங்கள் மீட்கப்பட்ட நிலையில், அந்தப் புதைகுழி மனிதப் புதைகுழியாக யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டது.

மனிதப் புதைகுழிதானா என்ற ஐயப்பாட்டின் அடிப்படையிலேயே இதுவரை அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன. எனினும், மனிதப் புதைகுழிதான் என்று நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்ட பின்னர், மேலதிக அகழ்வுப்பணிகளுக்காக துறைசார் திணைக்களங்களிடம் நிதி கோரப்பட்டுள்ளது. எதிர்வரும் 26ஆம் திகதியன்று புதைகுழி மீதான அடுத்தகட்ட அகழ்வுப்பணிகள் முன்னெடுக்க வாய்ப்புள்ளதாகக் கருதப்பட்ட, அதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில், கோரப்பட்ட நிதி இதுவரை விடுவிக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### நீதிமன்றில் வழக்கு

செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழிகள் தொடர்பான வழக்கு, யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. சமர்ப்பணங்களைத் தொடர்ந்து, வழக்கு எதிர்வரும் செவ்வாய்க்கிழமைக்குத் தவணையிடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

**வேலையாட்கள் தேவை**
சுன்னாகத்தில் அமைந்துள்ள புடவையகத்திற்கு வேலை தெரிந்த, பழக விரும்பும் பெண் வேலையாள் தேவை. (சுன்னாகத்தை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது) சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:- 076 632 3554

**வீடு வாடகைக்கு உண்டு**
இராமநாதன் வீதி பல்கலைக்கழகத்திற்கு முன்பாக அமைந்துள்ள மேல் வீடு வாடகைக்கு உண்டு
தொடர்பு: 076 882 8694, 077 411 8851

Thinnai Farms **மாபெரும் மலிவு விற்பனைக்கு**
2 1/2 மாத ஊர்க்கோழி
(சராசரி நிறை - 700g, விலை - 790.00)
ஊர்ச் சேவல் (கிலோ - 1500)
3 1/2 மாத பிறிமா சிவப்பு முட்டை கோழிகள்
(சராசரி நிறை - 950g, விலை - 1180.00)
மொத்த கொள்வனவிற்கு விசேட விலைக்கழிவு உண்டு.
077 924 1413, 076 436 9080, 077 3288 278

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோழி வளர்ப்போருக்கு

**இத்தாலியில் (Italy) இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கோழி குஞ்சு பொரிக்கும் இயந்திரம் (Egg Incubator)**

ஒரே நேரத்தில் 49 கோழி முட்டைகளை அடைகாக்கும் அரை தானியங்கி இயந்திரம் இப்பொழுது எம்மிடம். அத்துடன் விரும்பிய பறவைகளின் முட்டைகளையும் பயன்படுத்தலாம். **இது ஒரு இத்தாலி (Italy) நாட்டின் தயாரிப்பு**

"நாங்கள் உங்களோடு"



### ஆர்க் .என். கம்பனி

- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன் 021 228 2020

Hotline: 071 535 7799 / 071 535 7803

## காணி வீடு விற்பனைக்கு

பருத்தித்துறை கடற்கரை வீதியில் அமைந்துள்ள (கடற்கரை வீதி முதலாம் குறுக்குத் தெரு சந்தி) 3 பரப்புக் காணி, வீடு விற்பனைக்கு உண்டு. விலை 3.5 கோடி ரூபா (CAD 160,000) உடனடி விற்பனைக்கு.

Email:- pointpedroproperty@gmail.com

077 622 5033, 077 714 8034

### LAND AND HOUSE SALE

Point pedro, Beach road property (Approxmately 30 Perches) Located at the Intersection of Beach Road and First Cross Street in downtown Pointpedro is available for quick sale the asking price is 350 Lakhs Rupees (CAD 160,000) for forther info and

Email:- pointpedroproperty@gmail.com

077 622 5033, 077 714 8034

## காணி விற்பனைக்கு

கைதடி நுணாவில் A9 வீதி முகப்பாகக் கொண்ட 3600 சதுர அடி கட்டடம் மற்றும் Bulk power Supply உடன் கூடிய 7 ½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :

076 822 7515

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், தென்மராட்சி, கைதடி வடக்கு கலட்டியபுலத்தில் 54 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு

(CS 59907) E

தொடர்பு: 077 614 6451

## தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 40 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு.பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். 1 ஏக்கர் 15 இலட்சம்.

(CS/58593) J-1

தொடர்பு:- Whatsapp:- 0044 740 537 3526

## காணி விற்பனைக்கு

தாவடி வடக்கு தாவடியில் வீடு கட்டுவதற்கு உகந்த 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (1/2 பரப்பாகவும் வழங்கப்படும்)

தொடர்புகளுக்கு:

077 255 0807

CR 4518


# ஆங்கிலக் கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஜூன் 21

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் குறுகியகால ஆங்கில கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்பு வோர் 16 வயதிற்கு மேற்பட்டவராகவும் க.பொ.த. சாதாரண தரத்தில் முதலாம் மொழி கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை இன்று சனிக்கிழமைக்கு முன்னதாக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம் பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்கமுடியும் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ச-41)


## காணி வீடு விற்பனைக்கு உண்டு

யாழ் அளவெட்டி பெரிய சங்கத்தானை சந்தியில் இருந்து 100m தூரத்திலும், A.M.A கல்வி நிலையத்தில் இருந்து 50m தூரத்தில் நல்ல நீர்க்கிணறு, வருமானங்களும் கிடைக்கக்கூடியதாக உள்ளது. குடியிருப்புச்சூழலுடன் 5 பரப்புக் காணி, வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

076 755 8606, 077 861 5247

## காணி விற்பனைக்கு

**நவக்கிரியில் முதலீட்டுக்கு சிறந்த 2-பரப்பாக பிரிக்கப்பட்ட 20 காணித்துண்டுகள்**

- வங்கிக்கடன் பெறக்கூடிய தெளிவான ஆவணங்கள்
- போக்குவரத்துக்கு இலகுவான தார் வீதி
- நல்ல தண்ணீர் வளம்
- அமைதியான குடியிருப்பு சூழல்


**விலை விவரம்:**

LKR 17 இலட்சம் / பரப்பு (மேலதிக விவரங்களுக்கு அழையுங்கள்)

**உடன் கொள்வனவு செய்பவர்களுக்கு 10% விசேட விலை சலுகை உண்டு....**

(CS 58619) E

தொடர்பு: 077 082 1010, 076 662 2216

## அறிவித்தல்

பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும்.

**யோக சுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லம்**
**வன்னேரிக்குளம், கிளிநொச்சி.**

**இடம் :- இல்ல வளாகம்**
**காலம் :- 05.07.2025 (சனிக்கிழமை)**
**நேரம் :- காலை 10.00 மணி**

மேற்படி எமது இல்லத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும் 05.07.2025 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் இல்ல வளாக கலாசார மண்டபத்தில் நடைபெற உள்ளது. எனவே அனைத்து அங்கத்தவர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி.

**தலைவர்,செயலாளர்.**
**யோக சுவாமிகள் திருவடி நிலையம்,**
**வன்னேரிக்குளம்.**

## தசாக கிருஹயக்ஞ அழைப்பு



**கடந்த (12.06.2025) வியாழக்கிழமை மூலநக்ஷத்திர அபரபக்க துதியை திதியில் சிவசாயுச்சியம் அடைந்த எமது குடும்பத் தலைவர்,**

**காசிப கோத்திரம்**

**சிவஸ்ரீ பரமேஸ்வர குருக்கள் மனோகர குருக்கள்**

அவர்களது ஆத்மசாந்திக்கிரியைகள் பின்வரும் தினங்களில் எமது இல்லத்தில் நடைபெறும்.

21.06.2025 (ஆனி 07) சனிக்கிழமை தசாகம் காலை 07.00 மணி
22.06.2025 (ஆனி 08) ஞாயிற்றுக்கிழமை ஏகோதிஷ்டம். மாசிகம்
23.06.2025 (ஆனி 09) திங்கட்கிழமை சபீண்டீகரணம்
24.06.2025 (ஆனி 10) செவ்வாய்க்கிழமை கிருஹயக்ஞம் காலை 10.00 மணி

மேற்படி கிரியைகளில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு எமது இல்லத்தில் 24.06.2025 அன்று நடைபெறவிருக்கும் சமாராதனை நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

G.PS **விளையாட்டரங்க வீதி,**
**கல்வியங்காடு.**

(CS/58630) J-1

**குடும்பத்தினர்**
**0774010264**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.